**செய்தி வெளியீடு எண் : 1617** **நாள் : 16.09.2022**

# இன்று (16.09.2022), தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, தமிழகத்தில் மேற்கொள்ள வேண்டிய விளம்பரப்பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, எதிர்வரும் 2023 ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் சிறு தானியங்களின் முக்கியத்துவம் குறித்து. ஏற்படுத்தும் மக்களிடையே விழிப்புணர்வு வகையில், மக்காச்சோளம் தவிர்த்து, இதர சிறுதானியங்கள் உற்பத்தியை உயர்த்தவும், பயன்பாட்டினை அதிகரிக்கவும். பல்வேறு வகையான விளம்பரப் பணிகளை மேற்கொள்வதற்கான முதல் ஆலோசனைக் கூட்டம் இன்று (16.09.2022) தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வேளாண்மை–உழவர் நலத்துறை துறையின் அனைத்து தலைவர்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு. பள்ளிக் கல்வி, உயர் கல்வி, சமூக நலம். ஊரக வளர்ச்சி, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு போன்ற துறைகள் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாதங்களுக்கு மாதாந்திர வாரியாக செயல்படுத்தப்பட வேண்டிய தொழில்நுட்பம் மற்றும் விளம்பரப் பணிகள் குறித்த விவாதம் நடைபெற்றது.

தற்போது பொது மக்களிடையே அரிசி உணவு அதிகரித்து, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் பயன்பாடு வெகுவாகக் குறைந்துவிட்டதால், சாகுபடி பரப்பும் குறைந்துள்ளது. குறைந்த வயது, அதிக ஊட்டச்சத்து, வறட்சியை தாங்கி வளரும் தன்மை மற்றும் பூச்சி நோய் அதிகம் தாக்காத நிலை போன்ற காரணங்களினால், மானாவாரி நிலங்களில், சிறுதானியங்களை சாகுபடி செய்து விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட இயலும். ஆனால், உற்பத்தி செய்த விளைபொருட்களை மதிப்புக் கூட்டி, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு செல்வதில் பல்வேறு இடர்பாடுகள் உள்ளதை தலைமைச் செயலாளர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

எனவே, கூட்டுறவு துறை, சமூக நலத் துறை போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பொது விநியோகம், மதிய உணவு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களுக்குத் தேவையான சிறுதானியங்களை தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும் துறை முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

சிறுதானியங்களில் ஆராய்ச்சி பணி என்பது குறைந்து வருவதை சுட்டிக் காட்டி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், சிறுதானிய ஆராய்ச்சியில், கூடுதல் கவனம் செலுத்தி, சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்கவும், தானியங்களின் சேமிப்புக் காலத்தினை கூட்டி மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானியப் பொருட்களின் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குமாறு தலைமைச் செயலாளர் அவர்கள் பல்கலைக் கழக விஞ்ஞானிகளை கேட்டுக் கொண்டார்கள்.

சிறுதானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானமும், வாழ்வாதாரமும் மேம்பட பொதுமக்களிடையே தேவையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண் துறை அரசுச் செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., உள்ளிட்ட பல்வேறு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
(ம) அரசு செயலாளர்

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in